ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2379/09 – 2024 අප්‍රේල් මස 08 වැනි සඳුදා – 2024.04.08
2379/09 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் இல. MN/54, துல்லுகுடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் கீலியன்குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட *2023.10.25* ஆந் திகதிய MN/MNN/2023/521 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

*01.* **துண்டு 'A' – கீலியன்குடியிருப்புக்காணி – விஸ்தீரணம்: 0.7809 ஹெக்டயார்**

வடக்கு: (உரிமைகோருவோர் தெரியாத) கீலியன்குடியிருப்புக் காணி ; கிழக்கு: (உரிமைகோருவோர் தெரியாத) கீலியன் குடியிருப்புக் காணி ; தெற்கு: (உரிமைகோருவோர் தெரியாத) கீலியன்குடியிருப்புக் காணி, வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) மற்றும் துண்டு B ; மேற்கு: துண்டு B, வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) மற்றும் (உரிமைகோருவோர் தெரியாத) கீலியன்குடியிருப்புக் காணி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது தொடர் இல. : 4-3/11/2023/RE/180.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
இல. *1200/6*, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2024*, பெப்புருவரி *01*.

EOG 04 - 0085

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின்


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் இல. MN/62, தோட்டவெளி கிராம அலுவலர் பிரிவில் தோட்டவெளி கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.10.27 ஆந் திகதிய MN/MNN/2023/542 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

*01.* **துண்டு 'A' - குறிப்பிடப்படவில்லை - விஸ்தீரணம் : 0.2671 ஹெக்டயார்**

வடக்கு : வீதி மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவெளிக்காணி ; கிழக்கு : (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவெளிக்காணி மற்றும் வீதி ; தெற்கு : (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவெளிக்காணி மற்றும் துண்டு B ; மேற்கு : துண்டு B, (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவெளிக்காணி மற்றும் வீதி.

*02.* **துண்டு 'B' - தோட்டவெளிக்காணி - விஸ்தீரணம் : 0.4626 ஹெக்டயார்**

வடக்கு : (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவெளிக்காணி, வீதி மற்றும் துண்டு A (வீதி) ; கிழக்கு : துண்டு A (வீதி), வீதி மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) தோட்ட வெளிக்காணி ; தெற்கு மற்றும் மேற்கு : (உரிமை கோருவோர் தெரியாத) தோட்ட வெளிக்காணி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது தொடர் இல. : 4-3/11/2023/RE/195.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 01.

EOG 04 - 0086